**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - 2015**

-----------------------------------------------------------------------

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடனான இணக்கம்**

07 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்படுகின்ற போதும் கூட அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், 1996 இல் கல்கிசையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,648,453 பெறுமதியான பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிலையத்தின் காணி மற்றும் கட்டிடமானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் கட்டிடங்கள் கணக்கின் கீழ் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைப் பிரிவுக்கான நிலையம், பட்டப்பின் படிப்பு பிரிவு மற்றும் முதுகலை வியாபார நிர்வாக நிகழ்ச்சித்திட்டப் பிரிவு என்பன வெளிவாரிப் பட்டம் மற்றும் முதுகலை பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 18,416,145 தேறிய வருமானத்தை ஈட்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் கணக்குகளுடன் அப் பிரிவுகளின் கொடுக்கல்வாங்கல்கள் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிணைமுறி மீறல் கணக்கின் மீது இரண்டு கல்விசார் பதவியணியினரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய ரூபா 1,110,683 ஆன மொத்தத் தொகையொன்று கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 6,648,453 பெறுமதியிடப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிலையத்தின் கட்டிடம் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் இடித்தகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான கட்டிடத்தின் பெறுமதி மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன கணக்கேடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிக் கோவை** | |
| X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது 04 நாட்களிலிருந்து 113 நாட்கள் வரையான வீச்சில் 332 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையினை பதின்மூன்று கல்வி சாராத பதவியணியினர் பெற்றிருந்த போதிலும் அந்த சமபளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் படிவம் 96 இல் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 102 முதல் 104 வரை | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றிற்காக ரூபா 199,075 கூட்டுத்தொகையான திருத்தக் கிரயம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இழப்புக்களின் அளவு மற்றும் காரணத்தை மதிப்பிடுவதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 396 | பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ரூபா 484,473 மொத்தப் பெறுமதியான நூற்றுநான்கு காசோலைகள் 02 தொடக்கம் 09 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தப் பெறுமதி நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 571 | ரூபா 1,539,815 கூட்டுத்தொகையான அறுபத்தியிரண்டு மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் 2 தொடக்கம் 12 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் இருந்தன. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 101,928,821 தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 170,608,906 ஆன தேறிய பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 68,680,085 பின்னடைவொன்றினை

காட்டுகின்றது. ரூபா 176,272,418 தொகையால் ஆளணி வேதனங்கள் அதிகரித்தமை இந்த பின்னடைவுக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

#### (அ) பட்டக் கற்கைநெறிகள்

கடந்த மூன்று ஆண்டுகளின் போது ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| பீடங்கள் | சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | **2015** | **2014** | **2013** |
| பிரயோக விஞ்ஞானம் | 329 | 244 | 243 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 239 | 246 | 418 |
| முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 370 | 396 | 376 |
| இஸ்லாமிய மற்றும் அரபு மொழி | 362 | 340 | 231 |
| பொறியியல் | 101 | 114 | 102 |
| மொத்தம் | **1,401** | **1,340** | **1,370** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரயோக விஞ்ஞான பீடத்திற்கும் இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடத்திற்கும் மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது முறையே 35 சதவீதம் மற்றும் 57 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதே நேரம் மீளாய்வாண்டின் போது கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

#### (ஆ) மாணவரொருவருக்கான கிரயம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கைகள் மற்றும் மாணவரொருவருக்கான கிரயம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2015** | **2014** | **2013** | **2012** |
|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா ’000) | 397,507 | 300,144 | 236,707 | 153,310 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 3,684 | 3,227 | 2,845 | 2,034 |
| மாணவரொருவருக்கான | 108 | 93 | 83 | 75 |

கிரயம் (ரூபா '000)

2012 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது ஒவ்வொரு ஆண்டிலும் பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**(இ) ஆராய்ச்சிப் படிகளின் கொடுப்பனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஏப்ரல் 20 ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க உயர் கல்விச் சுற்றறிக்கை மற்றும் 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் அவர்களுடைய ஆராய்ச்சி முன்மொழிவினை சமர்ப்பிக்காத கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சிப் படிகளைப் பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர். எனினும், ஆராய்ச்சிக் குழுவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றிருக்காத மூன்று கல்விசார் பதவியணியினர் மீளாய்வாண்டின் போது ரூபா 501,002 கூட்டுத்தொகையான ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றிருந்தனர்.

(ii) 2014 ஆம் ஆண்டில் மூத்த விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் 07 ஆராய்ச்சி முன்மொழிவுகள் தொடர்பில் ஆராய்ச்சி வேலைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவை 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சி வேலைகள் 2016 மே 13 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் அவ் விரிவுரையாளர்களுக்காக ரூபா 190,000 மொத்தத் தொகையை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது.

(iii) ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கு 2011 ஆம் ஆண்டில் விரிவுரையாளரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 22,500 தொகையான ஆராய்ச்சி மானிய முற்பணம் 2013 ஆம் ஆண்டில் முற்பணத்தை தீர்ப்பனவிற்காக விரிவுரையாளரால் அனுப்பப்பட்ட வேண்டுகோளை ஆராய்ச்சி வெளியீட்டுக் குழு ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் 2016 யூன் 13 வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கற்றலுக்கான விடுமுறை வழங்கல்**

2006 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியின் போது மூத்த விரிவுரையாளரொருவரிற்காக கொடுப்பனவுடன் 39 மாதங்களிற்காகவும் கொடுப்பனவின்றி 298 நாட்களிற்காகவும் கற்கை விடுமுறையினை பல்கலைக்கழகம் வழங்கியிருந்ததுடன் மலேசிய கெபாங்சன் பல்கலைக்கழகத்தில் பிஎச். டி. நிகழ்ச்சித்திட்டத்தை கற்பதற்காக உயர் கல்விக்கான தேசிய நிலைய (என்சிஏஎஸ்) செயற்திட்ட மானியத்தின் கீழ் ரூபா 2,179,410 நிதி உதவி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 05 வருடங்கள் கடந்த பின்னரும் கூட விரிவுரையாளர் அவருடைய பிஎச். டி. நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(உ) வருகை விரிவுரையாளர்களின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது பொறியியல் பீடத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்கு 42 வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் நியமித்திருந்ததுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட காலப்பகுதியினுள் பாடத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வேண்டப்பட்டிருந்தது. எனினும், ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் 10 மணித்தியாலங்கள் தொடக்கம் 22

மணித்தியாலங்கள் வரையான வீச்சிலான விரிவுரை மணித்தியாலங்கள் அவ் விரிவுரையாளர்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதனால் அவ் விரிவுரையாளர்களால் முழுப் பாடத்திட்டங்களையும் பூர்த்தியாக்குவது தொடர்பில் ஐயத்திற்கிடமாகாகவுள்ளது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **பாடம்** | **ஒதுக்கப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்** | **பூர்த்தி செய்யப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்** | **பூர்த்தி செய்யப்படாத விரிவுரை மணித்தியாலங்கள்** |
|---|---|---|---|
| திரவ இயக்கவியல் | 38 | 28 | 10 |
| மூலப்பொருள் இயக்கவியல் | 38 | 28 | 10 |
| உற்பத்திப் பொறியியல் | 30 | 18 | 12 |
| தரவுக் கட்டமைப்பு | 30 | 12 | 18 |
| நெடுஞ்சாலைப் போக்குவரத்து மற்றும் பொறியியல் | 37 | 26 | 11 |
| மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பு | 30 | 08 | 22 |

## 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெண்பலகைகள் கொள்வனவு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது பலகை ஒன்று ரூபா 14,720 வீதம் ரூபா 132,480 பெறுமதியான 09 வெண்பலகைகளை பலகலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவை – 2006 இன் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் புதிய பீடக் கட்டிடமொன்றின் திறப்பு விழாவிற்கு முன்னர் விநியோகிப்பதற்கு வெண்பலகைகள் அவசரமாக தேவைப்பட்டன என உப வேந்தர் எனக்கு தெரிவித்திருந்தார்.

(ii) பல்கலைக்கழகத்திற்கு அதே வெண்பலகைகளை வழங்கியிருந்த அதே விநியோகஸ்தரிடமிருந்து கணக்காய்வு நோக்கத்திற்காக பெறப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் வெண்பலகையின் குறித்த வகையை ரூபா 5,120 வீதம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தனர். அதற்கிணங்க, ரூபா 86,400 தொகை விநியோகஸ்தரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இந்த விடயம் பல்கலைக்கழகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 128(1)(ஓ) பிரிவின் பிரகாரம் மோசடித்தன்மையான இக் கொடுக்கல்வாங்கலிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிற்கெதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) மொழி ஆய்வுகூடத்தினை ஸ்தாபித்தல்

ரூபா 8.1 மில்லியன் மொத்த தொகையொன்றை செலவிட்டு கலை மற்றும் கலாச்சார பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மொழி ஆய்வுகூடமொன்று ஆறு ஆண்டுகளிற்கு மேலாக குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4.1 மில்லியன் பெறுமதியிடப்பட்ட மல்ரிமீடியா கணணிகள் மற்றும் மாணவர்களிற்கான கூடங்கள் போன்ற உபகரணங்கள் தற்போது வழக்கற்றுப்போயிருந்தன. இதன் விளைவால், இந்த ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்கு செலவிட்டிருந்த முழுத்தொகையும் பயனற்றதாகவிருந்தது.

**(இ) கணணி ஆய்வுகூடத்தினை ஸ்தாபித்தல்**

2013 ஆம் ஆண்டில் வெளிவாரிப் பட்டம் மற்றும் தொழில்சார் கற்கைக்கான நிலையத்தில் ரூபா 2.82 மில்லியன் செலவிட்டு ஸ்தாபிக்கப்பட்ட கணணி ஆய்வுகூடமொன்று 2016 யூன் 13 வரையிலும் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கைவிரல் அடையாள இயந்திரக் கொள்வனவு**

மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வரவினை குறிப்பதற்காக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிகள் பீடத்தின் பீடாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல் தொடர்பாக ரூபா 616,000 மொத்தக் கிரயத்தில் 2014 திசெம்பர் 10 இல் 10 கைவிரல் அடையாள இயந்திரங்களை பல்கலைக்கழகம் கொள்வனவு செய்து பொருத்தியிருந்த போதிலும் 2016 யூன் 15 வரையிலும் குறித்த நோக்கங்களிற்காக அவ் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவி வறிதாக்கப்பட்ட 02 கல்விசார் பதவியணியினர் மற்றும் 03 கல்விசாரா பதவியணியினரின் ரூபா 665,570 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 04 முதல் 16 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட கடன்கள் செல்லுபடியான பிணைதாரர்களை பெற்றுக்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்ததனால் இந்த நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரினால் எடுக்கப்பட்ட விடுமுறைகள் விடுமுறைப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகம் மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,054,468 தொகையான ஒப்பந்தக் கொடுப்பனவுகள் மீது 11 சதவீதப்படி கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக 12 சதவீதப்படி ரூபா 1,398,693 தொகையான பெறுமதி சேர் வரியினை கணிப்பீடு செய்திருந்தது. இதன் விளைவால், ரூபா 116,557 தொகை ஒப்பந்தகாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை 2016 யூன் 13 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **முற்பணக் கொடுப்பனவு**

மீளாய்வாண்டின் போது 25 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகம் அதன் பதவியணியினருக்கு ரூபா 1,243,600 கூட்டுத்தொகையான முற்பணங்களை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்டமைக்கான நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட முற்பணங்கள் 07 நாட்களிலிருந்து 84 நாட்கள் வரையான காலவீச்சுத் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(ii) முற்பணமாக பதவியணியினரால் வேண்டப்பட்ட எந்தத் தொகையும் வேண்டப்பட்ட தொகையின் தன்மை மற்றும் நியாயத்தன்மையை இனங்காணாமல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், 05 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 157,000 கூட்டுத்தொகையான முற்பணங்கள் முழுவதும் காசாக தீர்வுசெய்யப்பட்டிருந்ததுடன் 20 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,086,000 கூட்டுத்தொகையான முற்பணங்களின் 50 சதவீதம் காசாக தீர்வுசெய்யப்பட்டிருந்தது. இது பொதுநிதிகளை மோசடி செய்வதற்கு வழிவகுத்திருந்தது.

(உ) **பரீட்சை மண்டத்தை புதுப்பித்தல்**

---

நூலகக் கட்டிடமாக பயன்படுத்துவதற்கென முதலில் நிர்மாணிக்கப்பட்ட மண்டபமொன்று 2007 ஆம் ஆண்டில் பரீட்சை மண்டபமாக புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் பட்டமளிப்பு மற்றும் பரீட்சைகளை நடாத்தும் நோக்கத்திற்காக இதைப் பயன்படுத்துவதற்காக ரூபா 15 மில்லியன் செலவுசெய்ததன் மூலம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இது மீளவும் புதுப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொதுப் பணத்தின் குறிப்பிடத்தக்களவு தொகையொன்று இப் புதுப்பித்தல் வேலைகளுக்காக செலவிட வேண்டியிருந்த போதிலும் புதுப்பித்தல் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆற்றிற்கு மிக நெருக்கமாக பரீட்சை மண்டபம் அமைந்திருப்பதனால் மழை காலத்தின் போது இப்பகுதி வெள்ளத்தில் மூழ்குவதற்கான சாத்தியமொன்றுள்ளது. இந்த இடம் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 3 அடி உயரத்தில் வெள்ளம் பெருக்கெடுத்ததென மேலும் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் புதுப்பித்தல் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த விடயம் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பட்டமளிப்பு மற்றும் பரீட்சைகளை நடாத்தும் நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்கு மண்டபம் புதுப்பிக்கப்பட்டிருந்த போதிலும் காற்றோட்டம் இல்லாமை காரணமாக இரு நோக்கங்களிற்காகவும் இதை பயன்படுத்த முடியாதிருந்தது.

(iv) உரிய நோக்கங்களிற்காக இவ் மண்டபத்தை பயன்படுத்த முடியாதிருந்தமையினால் 2016 யூன் 15 வரையிலும் இது விளைவற்றிருந்தது. ஆகையால், புதுப்பித்தல் வேலைகளிற்காக செலவிட்ட ரூபா 15 மில்லியன் தொகை பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டில் விரிவுரையாளரொருவரிடமிருந்து அவருடைய உடன்படிக்கையை முறித்துக் கொண்டமைக்காக பிணைமுறிப் பெறுமதியாக ரூபா 1.70 மில்லியன் தொகை அறவிடவேண்டியிருந்தது. எனினும், பல்கலைக்கழகம் 09 ஆண்டுகள் காலதாமதத்தின் பின்னர் 2013 ஆம் ஆண்டிலேயே இத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் குறித்த விரிவுரையாளர் பிணைமுறிப் பெறுமதியின் அறவீட்டிற்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல்செய்திருந்ததுடன் அறவீடுகளிற்காக நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கைக்கு அவர் திரும்பிய பின்னர் ஆறு வருடங்களிற்கு மேலாக

பல்கலைக்கழகம் தாமதித்திருந்தமையினால் விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை எதுவாகிலும் அவற்றை திரும்ப செலுத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. உரிய விரிவுரையாளரிற்கு கடிதம் வழங்குவதற்கு தாமதித்தமைக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரின் கவனக்குறைவால் ரூபா 1.73 மில்லியன் நட்டமொன்றை பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் 2016 யூன் 13 வரை அவ் உத்தியோகத்தரிற்கெதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வானது ரூபா 37 மில்லியன் மொத்தக் கிரயமுடைய நிலையான சொத்துக்களின் 2,477 உருப்படிகளின் பற்றாக்குறையினை வெளிப்படுத்தியிருந்த போதிலும் விசாரணைகளை நடாத்துவதற்கும் பற்றாக்குறைக்கான காரணங்களை தீர்மானிப்பதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலையான சொத்துக்களின் அவ் உருப்படிகளின் கிரயம் கணக்கேடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் 2016 யூன் 13 வரையிலும் இது தொடர்பில் பல்கலைக்கழகம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

**(ஏ) சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிக்கான முறையற்ற நியமனம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 1997 நவம்பர் 21 ஆம் திகதிய 721 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிக்கான ஆட்சேர்ப்பு திறந்த விளம்பரத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தற்காலிக உதவி விரிவுரையாளர்களாக கடமையாற்றிய ஒன்பது உத்தியோகத்தர்கள் மூத்த விரிவுரையாளர்களாக பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

**(ஐ) மாணவர் விடுதிக்கான மெத்தைகளின் கொள்வனவு**

2014 ஆம் ஆண்டில் ரூபா 3.14 மில்லியன் மொத்தக் கிரயத்தில் பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 800 மெத்தைகளின் தரம் மற்றும் விலை தொடர்பாக 2014 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கிணங்க, அவ் மெத்தைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பரீட்சிப்பு அறிக்கையொன்று பெறப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் நியமத் தேவைப்பாடுகளுடன் மெத்தைகளின் தரம் திருப்தியளிக்கவில்லையென உறுதிப்படுத்தியிருந்தது. எனினும், இந்த முறையற்ற கொள்வனவிற்குப் பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தரிற்கெதிராக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் சேதமடைந்த மெத்தைகளை மாற்றி வழங்குவதற்காக அல்லது சாத்தியமானளவுக்கு திருத்தங்களை மேற்கொள்வதற்காக இந்த விடயம் விநியோகஸ்தரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் ஏற்பட்ட இழப்புக்களை அறவிடுவதற்கு அடுத்த படிமுறைகளை எடுப்பதற்காக பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார்.

**4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முகாமைத்துவ தினக்குறிப்பேடுகளை அச்சிடுதல்**

2014 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் 800 தினக்குறிப்பேடுகள் அச்சிட்ட போதிலும் உண்மையான தேவைப்பாடுகளை அடையாளங்காணாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 1.9 மில்லியனை செலவிட்டு 2,000 முகாமைத்துவ தினக்குறிப்பேடுகளை பல்கலைக்கழகம் அச்சிட்டிருந்தது. இதன் விளைவால்,

பல்கலைக்கழகத்துடன் நேரடித் தொடர்பில்லாத நபர்களிற்காக ரூபா 1.2 மில்லியன் பெறுமதியிடப்பட்ட 1,232 தினக்குறிப்பேடுகளை பல்கலைக்கழகம் வழங்க வேண்டியிருந்த அதேநேரம் ரூபா 44,650 பெறுமதியிடப்பட்ட 47 தினக்குறிப்பேடுகள் 2016 யூன் 15 வரை களஞ்சியத்தில் விளைவற்றிருந்தன.

**(ஆ) பிரதான திட்டத்தைத் தயாரித்தல்**

2007 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காக பிரதான திட்டமொன்றை தயாரிப்பதற்கு ஐக்கிய இராச்சியத்தை அடிப்படையாகக் கொண்ட பொறியியல் மதியுரை நிறுவனமொன்றிற்கு ரூபா 16.8 மில்லியன் தொகையான மதியுரைக் கட்டணத்தை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது. பின்னர், தேவைப்பட்ட தகவல்கள் இல்லாமை காரணமாக நன்கொடை முகவரால் முன்னைய பிரதான திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் 2010 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் புதிய பிரதான திட்டத்தை தயாரிப்பதற்கு வேறு மதியுரை நிறுவனத்தை நியமித்திருந்ததுடன் ரூபா 7.2 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. இதன் விளைவால், ஐக்கிய இராச்சியத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 16.8 மில்லியன் தொகை பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

## 4.5 ஒப்பந்த நிர்வாகம்

### 4.5.1 பிரயோக விஞ்ஞான பீடத்தில் மாணவர் விடுதியினையும் பதவியணியினர் இல்லங்களையும் நிர்மாணித்தல்

2011 நவம்பர் 01 இல் ரூபா 92.51 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் மாணவர் விடுதி மற்றும் பதவியணியினர் இல்லங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்றினை பல்கலைக்கழகம் கையளித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 17 இல் அல்லது அதற்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 யூன் 15 வரை 80 சதவீதமான வேலைகள் மாத்திரமே பூரணப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், விலை அதிகரிப்புக்களிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 7.09 மில்லியன் மேலதிக தொகையினை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஆரம்ப ஒப்பந்த விலையில் நாளொன்றுக்கு 0.05 சதவீதம் என்ற அடிப்படையில் ஆரம்ப ஒப்பந்த விலையில் 10 சதவீத உச்சத்திற்கு உட்பட்டு தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தகாரரிற்கு தாமதக் கொடுப்பனவுகளிற்காக தண்டப்பணமாக ரூபா 1.21 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 9.25 மில்லியன் தொகையான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ஒப்பந்தகாரரின் மிகவும் மந்தமான செயலாற்றல் காரணமாக மூன்று வருடங்களிற்கு மேலாக விடுதிக் கட்டிடத்தின் நிர்மாணம் தாமதமாகியிருந்தது. இதன் விளைவால், 2013 தொடக்கம் 2015 வரையான ஆண்டுகளின் போது பல்கலைக்கழக மாணவர்களிற்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களிற்கு ரூபா 8.69 மில்லியன் தொகையினை பல்கலைக்கழகம் வாடகையாக செலுத்த வேண்டியிருந்தது.

### 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியாளர் பதவி 2013 திசெம்பர் 15 தொடக்கம் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. இருப்பினும், நிதியாளர் பதவிக்கு தகைமையுள்ள உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு இதுவரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல ஆண்டுகளாக பேராசிரியர்கள் மற்றும் இணைந்த பேராசிரியர்களின் பதவி வெற்றிடங்கள் நிலவியிருந்தன. இந்த நிலைமை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மோசமானதாக பாதித்திருந்த போதிலும் இது தொடர்பில் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பல்கலைக்கழகம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழகம் 2015 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.

### 5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டியதுடன் அவற்றின் மீதான அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2016 யூன் 13 வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் வெளிப்படுத்தல் |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | தாமதக் கட்டணங்களின் அறவீடு, கால நீடிப்பிற்கான அனுமதி, ஒப்பந்த உடன்படிக்கையின் ஒப்பந்த நிபந்தனையின் இணக்கப்பாடு |